07.05.2026
DVC.No.13/2025

**ம.சா.1 அபிநயா, க/பெ.சரவணன்**
**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் திருமணத்திற்கு எனக்கு 10 சவரன் நகைகளும், எதிர்மனுதாரருக்கு 5சவரன் நகைகளும் சீர்வரிசை செய்ததை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு ஆதாரங்களாக ரசீதுகளோ, போட்டோக்களோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் திருமணத்திற்கு நகைகள் சீர்வரிசையாக செய்திருந்தால் அதற்கான ஆதாரங்களை நான் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறு எதுவும் செய்யாததால்தான் ஆதாரங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேலும் எனது நிரூபண வாக்குமூலத்தில் வாடகைக்கு குடி செல்லும்போது எனது திருமணத்திற்கு பெற்றோர் போட்ட நகைகளை விற்றுதான் வாடகைக்கு குடிபெயர்ந்தோம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் அது திருமணத்திற்கு எதிர்மனுதாரருக்கு போட்ட நகைகளை விற்றுதான் குடிபெயர்ந்தோம். மேற்படி விஷயத்தை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவ்வாறு நகைகளை அடகு வைத்து வாடகைக்கு குடிபெயர்ந்தோம் என்று சொல்லியுள்ள நிலையில் நகைகளை அடகு வைத்ததற்கான ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை எதிர்மனுதாரர்தான் நகைகளை அடகு வைத்தார். நான் சொல்வதுபோல் எதிர்மனுதாரர் நகைகளை அடகு வைக்கவில்லை என்றாலும் மேற்படி நகைகளை என் கைவசம் வைத்துக்கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

நான் எதிர்மனுதாரர் வீட்டில் ஒரு மாதத்தில் 2, 3 நாட்கள்தான் இருப்பேன் என்றாலும், என்னுடைய உடமைகள் அனைத்தும் எனது பெற்றோர் வீட்டில்தான் வைத்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரருடன் வசித்தபோது செல்போன் பயன்படுத்தினேனா என்றால் பயன்படுத்தினேன். எனக்கு செல் போனை எவ்வாறு பயன்படுத்தவேண்டும் என்று தெரியும் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ள எதிர்மனுதாரரின் அக்கா கணவர் நரசிம்மனும் 3ம் எதிர்மனுதாரரும் எனது அறையில் ஒன்றாக பலமுறை உடலுறவு கொண்டதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அதனை நிரூபிக்கும் வகையில் வீடியோ அல்லது புகைப்படம் ஆதாரம் ஏதும் எடுத்தேனா என்றால் இல்லை, நான் அவ்வாறு வீடியோ அல்லது புகைப்படம் எடுத்துவிடுவேன் என்ற எண்ணத்தில் அவர்கள் என்னுடைய செல்போனை வாங்கி வைத்துக்கொள்வார்கள். மேற்படி விஷயத்தை எனது மனுவிலோ அல்லது நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. அவ்வாறு மேற்படி நரசிம்மனும் 3ம் எதிர்மனுதாரரும் எனது அறையில் தவறு செய்ததை நான் தடுக்க முயற்சி செய்தேனா என்றால் எனது பெற்றோரிடம் சொல்லி பஞ்சாயத்து செய்தார்கள் மீண்டும் மனுதாரர்

யோசித்துவிட்டு ஒருமுறை 3ம் எதிர்மனுதாரரிடம் கேட்டதற்கு அவரது அறையில் அவரது கணவர் இருப்பதாகவும் அதனால் நாங்கள் இங்கு வந்து என்ன வேண்டுமானாலும் செய்வோம் என்று கூறினார். மேற்படி விஷயம் குறித்து பஞ்சாயத்து செய்ததாக கூறியுள்ள நிலையில் யார் யார் வந்து பஞ்சாயத்து செய்தனர் என்றால் எனது அம்மாவுடன் பிறந்த அக்கா, தங்கை பஞ்சாயத்து செய்தனர். எனது அம்மாவின் அக்கா என்ன வேலை செய்கிறார் என்றால் காவல் துறையில் உதவி ஆய்வாளராக இருக்கிறார். அவ்வாறு பஞ்சாயத்து செய்தபோது நான் உடனிருந்தேனா என்றால் உடனிருந்தேன். மேற்படி சம்பவம் குறித்து ஏன் காவல் துறையில் புகார் கொடுக்கவில்லை என்றால் நான் வாழவேண்டும் என்ற எண்ணத்தில் கொடுக்கவில்லை. நான் சொல்வதுபோல் நரசிம்மனும் 3ம் எதிர்மனுதாரரும் எந்தவித தவறும் எனது அறையில் செய்யவில்லை என்றாலும் அதற்கான ஆதாரமும் இல்லையென்றாலும் நான் என் தவறை மறைப்பதற்காக அவ்வாறு பொய்யான குற்றச்சாட்டை கூறுகிறேன் என்றால் சரியல்ல.

எனக்கும் கல்லூரி ஆங்கில் விரிவுரையாளரான கமலக்கண்ணனிடம் போன மூலமாக உரையாடல் செய்வதை 3ம் எதிர்மனுதாரர் கேட்டதால் நான் அவர்மீது பொய்யாக குற்றச்சாட்டை கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எதிர்மனுதாரர் வீட்டில் இருக்கும் சமயத்தில் மேற்படி கமலக்கண்ணனுடன் இரவு பகல் பாராமல் போன் பேசியதால் அதனை 3ம் எதிர்மனுதாரர் கண்டித்ததால் நான் அவர்மீது பொய்யாக குற்றச்சாட்டை கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

நான் எதிர்மனுதாரருடன் இருக்கும் சமயத்தில் ஒருநாள் 12 மணி அளவில் மேற்படி கமலக்கண்ணனிடம் வீடியோ கால் பேசியதை 1ம் எதிர்மனுதாரர் கண்டித்தார் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்திற்கு எனது பெற்றோர் வீட்டில் இருந்துவந்து பஞ்சாயத்து செய்ததை மறைத்து 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக பஞ்சாயத்து நடந்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் போன் செய்வதை வீட்டில் உள்ளவர்கள் கேட்பதால்தான் நான் எதிர்மனுதாரர் வீட்டில் 3 நாட்களுக்கு மேல் இருக்காமல் எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிடுவேன் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரருக்கு மகன் வயதிலுள்ள நபர்மீது பொய்யான குற்றச்சாட்டினை கூறுவதால் அவர்கள்தான் என்மீது நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

எனது நிரூபண வாக்குமூலத்தில் 2ம் எதிர்மனுதாரர் நான் குளிக்கும்போது பார்த்ததாக பொய்யான குற்றச்சாட்டை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரருக்கு காது கேட்காதவர் என்பதையும் பொருட்படுத்தாமல் அவருக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டினை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல அவருக்கு கண் தெரியும். கண் தெரியும் என்பவரும் அதுபோன்ற காரியங்களை செய்யமாட்டார்கள் என்றால் நான் எல்லோர்மீதும் சொல்லவில்லை. மேற்படி சம்பவத்தினை நிரூபிக்க ஆதாரம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

திருமணம் நடந்து ஒருவருடத்திற்குள்ளாகவே 3 வீடுகள் எனது விருப்பப்படி குடிமாறி 1ம் எதிர்மனுதாரரின் வேலை போகும் அளவிற்கு நான் நடந்துகொண்டேன் என்றால் சரியல்ல.

திருமணத்தின்போது 1ம் எதிர்மனுதாரர் எந்த நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார் வி.பி.ஜெ கம்பெனியில் வேலை பார்த்து வந்தார். தற்போது 1ம் எதிர்மனுதாரர் எந்த நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறார் என்றால் ஓயாசிஸ் ஐ.டி. நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறார். வி.பி.ஜெ நிறுவனத்தில் இருந்து ஏன் ஓயாசிஸ் ஐ.டி. நிறுவனத்திற்கு மாறினார் என்றால் சம்பளம் போதவில்லை என்று மாறினார். வி.பி.ஜெ நிறுவனத்தில் நல்லபடியாகதான் வேலை பார்த்து நல்ல சம்பளம் வாங்கிகொண்டிருந்தார் என்றாலும், நான் அடிக்கடி வீடு குடிமாற வற்புறுத்தி தொல்லை செய்ததால் அடிக்கடி விடுப்பு எடுத்து அதனால் அவருக்கு பணி நீக்கம் செய்யப்பட்டுவிட்டார் என்றால் சரியல்ல.

1ம் எதிர்மனுதாரர் எனது தேவைகளான திருமணம், வளைகாப்பு, மருத்துவச்செலவு, குழந்தையின் முதல் பிறந்தநாள் மற்றும் என்னுடைய பிறந்தநாள் செலவு ஆகியவைகளை சரியாக செய்தும் நான்தான் அவரை நிம்மதியாக வாழவிடாமல் தொல்லை செய்ததால் அவர் தற்கொலை முயற்சி செய்தார் என்றால் சரியல்ல, மேற்படி செலவுகளில் அவருக்கும் கணவனாக, தந்தையாக பொறுப்புள்ளது அதனால் செய்தார். மேற்படி செலவுகளை எல்லாம் கடன் வாங்கி ஒரு கணவனாக 1ம் எதிர்மனுதாரர் செய்திருந்த போதிலும், எனது மனுவில் 1ம் எதிர்மனுதாரர் என்னையும், எனது குழந்தையையும் சரியாக பராமரிக்கவில்லையென்று பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் செலவுகள் செய்வதுமட்டுமே ஒரு கணவனின் கடைமையல்ல, மனைவியையும் குழந்தையையும் சரியாக பராமரிக்கவேண்டும், மேலும் மருத்துவ செலவுகளை எனது குடும்பத்தார் செய்தனர். அவ்வாறு நான் சொல்வதுபோல் எனது மருத்துவ செலவுகளை எனது பெற்றோர் செய்திருந்தால் வந்தவாசியில் சிகிச்சை எடுத்திருப்பேன் என்றாலும், 1ம் எதிர்மனுதாரர் செலவு செய்ததால்தான் சென்னையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் எனது செலவில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை அப்போது எனக்கு இவ்வாறு பிரச்சனை வரும் என்று எனக்கு தெரியாது.

நானும், என் பெற்றோர்களும் மற்றும் உதவி ஆய்வாளர் பெரியம்மாவும் சேர்ந்துகொண்டு எனது மகள் இப்படிதான் இருப்பாள் என்றும், ஒழுங்காக வாழவில்லை என்றால் சும்மா விடமாட்டோம் என்று கொலை மிரட்டல்கள் விட்டார்கள் என்றால் சரியல்ல. ஒன்றுமில்லாத விஷயத்திற்கு எனது குடும்பத்தார்கள் 5 முறைவந்து எதிர்மனுதாரர்களை மிரட்டிவிட்டு சென்றனர் என்றால் சரியல்ல. இவ்வளவு பிரச்சனை செய்திருந்தும் 1ம் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழவேண்டும் என்றுதான் விரும்பினார் என்றாலும், நான்தான் குழந்தை உனக்கு பிறக்கவில்லையென்று அசிங்கபடுத்தி மன உலைச்சளை செய்துள்ளேன் என்றால் சரியல்ல 1-ம் எதிர்மனுதாரர்தான் அவ்வாறு குழந்தை எனக்கு பிறக்கவில்லை என்று அறிவிப்பு

அனுப்பியுள்ளார். அந்த அறிவிப்பில் 1ம் எதிர்மனுதாரர் திருமணம் நடந்து 3 அல்லது 4 நாட்கள்தான் வாழ்ந்துள்ளதால் சேர்ந்து வாழவேண்டும் அல்லது விவாகரத்து கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில்தான் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல.

நான் 1ம் எதிர்மனுதாரரிடம் குழந்தை உனக்கு பிறக்கவில்லை என்று கூறியதால்தான் 1ம் எதிர்மனுதாரர் டி.என்.ஏ பரிசோதனை செய்ய அறிவிப்பில் கோரினார் என்றால் சரியல்ல, நான் குழந்தை உனக்கு பிறக்கவில்லை என்று கூறியதாக அறிவிப்பில் குறிப்பிடவில்லை. நான் சொல்வதுபோல் குழந்தை 1ம் எதிர்மனுதாரருக்கு பிறக்கவில்லை என்று கூறியிருந்தால் குழந்தைக்கு தேவையான செலவுகளை செய்திருக்கமாட்டார் என்றால் அதைதான் நாங்களும் குறிப்பிட்டோம் குழந்தை அவருக்கு பிறக்காத பட்சத்தில் ஏன் செலவு செய்தார் என்று பதில் அறிவிப்பில் கேட்டோம். பதில் அறிவிப்பில் அதைமட்டும்தான் கேட்டோமா அல்லது சேர்ந்து வாழ கேட்டேனா என்றால் சேர்ந்து வாழவும் கேட்டேன். ஏன் அவ்வாறு பதில் அறிவிப்பில் கேட்டிருந்தோம் சேர்ந்து வாழ எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எதிர்மனுதாரர் வீட்டில் பிரச்சனை இருப்பதால் தனி குடித்தனம் வாழ கேட்டேன் அவர் வாழ வரவில்லை.

நானும், 1ம் எதிர்மனுதாரரும் ஏற்கனவே தனி குடித்தனம்தான் வாழ்ந்து வந்தோம் என்றால் சரியல்ல கூட்டு குடும்பமாகதான் வாழ்ந்தோம். நானும் 1ம் எதிர்மனுதாரரும் மேலகொண்டையூரில் தனி குடித்தனம் இருந்ததை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழவேண்டும் என்ற எண்ணம் இருந்திருந்தால் நான் அவருக்கு எதிராக இந்த வழக்கினை தாக்கல் செய்திருக்கமாட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

நான் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்துவாழ விருப்பம் இல்லாமல் இந்த வழக்கினை தாக்கல் செய்த பிறகுதான் 1ம் எதிர்மனுதாரர் விவாகரத்துகேட்டு சென்னை குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல, அவர்தான் முதலில் விவாகரத்து கோரி அறிவிப்பு அனுப்பினார். 1ம் எதிர்மனுதாரர் நான் மனம் திருந்து வாழவேண்டும் என்ற எண்ணத்தில்தான் அறிவிப்பு மட்டும் அனுப்பினார் ஆனால் நான்தான் முதலில் இந்த வழக்கினை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல வாழவேண்டும் என்ற எண்ணம் இருந்திருந்தால் விவாகரத்து கேட்டு அறிவிப்பு அனுப்பியிருக்கமாட்டார். 1ம் எதிர்மனுதாரர் கட்டாயமாக விவாகரத்து கேட்கவில்லை என்றாலும் சரியல்ல.

1ம் எதிர்மனுதாரர் கொடுத்த அறிவிப்பில் எனக்கு 15 நாட்கள் சேர்ந்து வாழ அவகாசம் கொடுத்தார் என்றாலும் நான்தான் சேர்ந்து வாழவில்லை என்றாலும் சரியல்ல, 1ம் எதிர்மனுதாரர் அவ்வாறு சேர்ந்து வாழ அவகாசம் கோரவில்லை. நான் 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய பதிலுரையில் சேர்ந்து வாழ தயாராக இருப்பதாக கூறிவிட்டு நான்தான் முதலில் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணத்தில்தான ் இந்த வழக்கை தாக்கல ் செய்திருந்தேன். எனக்கு 1ம் எதிர்மனுதாரருடன் உண்மையில் சேர்ந்து வாழவேண்டும் என்ற எண்ணம் இருந்திருந்தால் சேர்ந்து வாழ கோரிதான் வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் எதிர்மனுதாரர்களை பழி வாங்கவேண்டும் என்ற எண்ணத்தில்தான் இந்த வழக்கினை தாக்கல ் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தற்போதுவரை எனது குழந்தையை 1ம் எதிர்மனுதாரரிடமும், அவரது பெற்றோரிடமும் காட்டாமல் மறைத்து வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது பெற்றோர் வீட்டில்தான் வசித்து வருகிறேன். இவ்வளவு பிரச்சனை நடந்த பின்னரும் 1ம் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழதான் விரும்புகிறார் என்றால் நானும் சேர்ந்து வாழதான் விரும்புகிறேன். நான் தற்போதும் வேலை பார்த்து சம்பாதித்து வருகிறேன் என்பதை மறைத்து எனது சொத்து விவரப்பட்டியலை தாக்கல் செய்துள்ளன் என்றால் சரியல்ல நான் டிசம்பர் மாதம் 2025ம் ஆண்டுவரை வேலை பார்த்துக்கொண்டுதான ் இருந்தேன ் அதன ் பின்னா ் தற்போது குழந்தையை பார்த்துக்கொள்ளவேண்டி வேலைக்கு செல்லவில்லை. மேற்படி விஷயத்தை எனது சொத்துவிவர பட்டியலில ் குறிப்பிட்டுள்ளேனா என்றால ் குறிப்பிடவில்லை. நான் எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்த எந்தவொரு குற்றச்சாட்டிற்கும் ஆதாரங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.